பதிவு எண். M 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: மாசி 26 (9–3–68) சனி ★ வெளியூர்: மாசி 27 (10–3–68) ஞாயிறு [இதழ்: 223

குடும்பக் கட்டுப்பாடு செய்திடுவீர்

திட்டமிட்ட குடும்பமே தெவிட்டாத குடும்பம். சுகாதாரச் செழிப்புப் பெற்றுச் சுகமாக வாழவும், அனைவரும் உணவு, உடை, உறையுள் வசதிகள் பெறவும், குடும்பத்துக்கு ஓர், இரு குழந்தைகள் இருப்பதே நல்லது.

# வாங்கும் சக்தி மிகுந்த இடத்தில் கட்டுப்பாடு--விலை குறைய அதுவே வழி

## அனைத்திந்திய சர்வீசுகள்--வட்டாரக் கல்லூரிகள் எதற்காக?

### 'பாதுகாப்புச் செலவைக் குறைக்க முயற்சி செய்யவேண்டும்--பொதுத் துறை நிர்வாகத்தைச் சீர்படுத்திட வேண்டும்'--சட்டமன்ற மேலவையில் முதலமைச்சர் அண்ணு கருத்துரை

சென்னை, மார்ச் 8—

"படி அரிசித் திட்டம்பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதில் இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன; 'வாங்கும் சக்தி அதிகம் ஆக ஆக விலை ஏறத்தான் செய்யும்; ஏறிய விலையில் மக்களுக்கு வாங்கச் சக்தி இருக்கிறபோது அதைக் கட்டுப்படுத்துவானேன்?' என்பது ஒரு தத்துவம் -- அது பொருளாதாரத் தத்துவம் அல்ல -- காங்கிரசின் தத்துவம்!

"எந்த விலை எவ்வளவு உயர்ந்துகொண்டுபோனாலும், ஏழை மக்களின் கட்டாயத் தேவையான உணவுப் பொருள்களின் விலை கைக்கு அடக்கமாக இருக்கவேண்டும்; அப்போதுதான் மற்றப் பண்டங்களின் விலைகள் குறைய வழி ஏற்படும். இது ஒரு பொருளாதாரத் தத்துவம்—கழகத்தின் தத்துவம்.

"அது மட்டுமல்ல; 'இதைச் சென்னைக்கும் கோவைக்கும் மட்டுந்தானா தரவேண்டும்? மற்றவர்களுக்கு இல்லையா?' என்று கேட்டார் எதிர்க் கட்சித் தலைவர். சென்னையிலும் கோவையிலும் சட்டபூர்வமான பங்கீடு அமுலில் இருந்தது என்பது மட்டுமல்ல; இங்கே படி அரிசி தருவதற்கான காரணம், அதுவும் ஒரு பொருளாதாரத் தத்துவம்தான்!

"எந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தாலும், அதனை உடனடியாக ஈர்த்துக்கொள்ளத் தக்க இடத்திலேதான் முதலில் கொண்டுவர வேண்டும்; 'வாங்கும் சக்தி மிகுந்துள்ள இடத்திலே கட்டுப்படுத்தினால்தான் வாங்கும் சக்தி குறைந்துள்ள இடத்தில் விலை குறையும்' என்பது ஒரு பொருளாதாரத் தத்துவம்!

"இப்படிச் சொல்வதை ஓர் எடுத்துக்காட்டு மூலம் உங்களுக்கு விளக்கிட விரும்புகிறேன்; சென்னையில் இந்தப் படி அரிசித் திட்டத்தைச் செயல்படுத்தாமல்—அரிசி நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தாமல் இருந்திருந்தால் என்ன ஆகும்? சென்னை நகர மக்கள், வாங்கும் சக்தி மிகுந்தவர்கள். அதனால், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களிலிருந்து எல்லா அரிசியும் அதிகவிலைக்கு விற்கப்படுவதற்காகசென்னை நகரத்துக்கு வந்துவிடும். அதனால், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்ட மக்களுக்கு அரிசிப் பஞ்சம் வரும்!

"அதேபோல் கோவை நகரில் இந்தக் குறைந்த விலை அரிசியும் கட்டுப்பாடும் இல்லையானால் அதையொட்டிய மாவட்டங்களில் பஞ்சம்தான் ஏற்படும். அது மட்டுமல்ல; கோவைக்குச் செல்லுகிற அரிசி எங்கெந்த ரூபத்திலோ -- எங்கெங்கோ -- எப்படியெல்லாமோ வெளியேறும்! இதெல்லாம் எதிர்க் கட்சித் தலைவருக்கும் தெரியும். இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் இந்தப் படி அரிசித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது"

என்று தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணு அவர்கள், சட்டமன்ற மேலவையில், 1968—69-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் ஏழு நாள் விவாதத்துக்குப் பதில் அளிக்கையில் விளக்கினர்கள்.

உடல் நலமற்று மருத்துவமனையில் இருந்த அண்ணு அவர்கள், நீண்ட நாட்களுக்குப்பின் மீண்டும் மேலவைக்கு வந்திருந்து மன்றத்தில் ஒரு மணி நேரம் சுவையும் பொருளும் பொதிந்த விளக்கவுரை ஆற்றினர்கள். மேலும் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"எனக்குச் சென்னையிலும் கோவையிலும் உள்ளவர்கள் வேண்டியவர்கள் என்றோ, கிராமப்புறங்களில் உள்ளவர்கள் வேண்டாதவர்கள் என்றோ பொருளில்லை. இந்தப் படி அரிசித் திட்டத்தை எல்லோருக்கும் வழங்கிடவே நினைக்கிறேன். ஆனால் நானோ, எதிர்க் கட்சித் தலைவரோ ஆசைப்படுவதாலே மட்டும் நிறைவேறிவிடுவதல்ல இது!

இந்த ஆண்டு எதிர்பார்த்த அளவு பருவமழை பெய்யவில்லை; மேட்டூர் நீர் மட்டம் பீதியூட்டும் அளவுக்குக் குறைந்திருக்கிறது; தாளடிப் பயிர் எதிர்பார்த்த விளைச்சலைத் தரவில்லை; சம்பாப் பயிரைக் காப்பாற்ற பெரும் பாடுபட்டுப் பலன் அதிகமாக இல்லை; இந்த நிலையில் எல்லோருக்கும் தருவதென்பதை இப்போது எப்படிச் சொல்வது?

எதிர்க் கட்சித் தலைவர், 'திட்டவட்டமாகச் சொல்லிவிடுங்கள்' என்றார்; சொல்லுவதில் இரண்டு வகை உண்டு; 'இன்னதைச் செய்யப்போகிறேன்' என்பது ஒருவகை; 'இன்ன நன்மையைச் செய்தேன்' என்று செய்துவிட்டுச் சொல்வது ஒருவகை; நான் இரண்டாவது வகையில் இருக்க ஆசைப்படுகிறேன்.

அடுத்து, 'இந்த வரவு-செலவுத் திட்டத்தில் புதியது ஒன்றும் இல்லை' என்றெல்லாம் சொன்னார்கள்; எனக்குங்கூட, 'புதிய மரபுகளை ஒன்றும சேர்க்கவில்லையே' என்று வருத்தந்தான்; என்ன செய்வது? முடியவில்லை; இப்போது இருக்கிற நிலையில், நாட்டின் எந்தப் பகுதியும் புதிய மரபுகளைத் தோற்றுவிக்கும் நிலையில் இல்லை; என்னால் முடிந்ததெல்லாம், ஓரளவு உபரியாக இந்தத் திட்டத்தைத் தயாரித்ததுதான்.

அதைக்கூட நான், 'என்னுடைய பெரும் சாமர்த்தியம்' என்று சொல்லமாட்டேன்; 'மத்திய அரசும் பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டம் அளித்து நாமும் பற்றுக்குறையாகவே அளித்தால் இந்தப் பற்றுக்குறை எங்கே போய் முடிவது?' என்ற எண்ணத்தில்தான் கொஞ்சம் உபரியாகவே தயாரித்தேன்.

'சிக்கனம்' என்ற வகையிலேகூட மாநில அரசு கணிசமாக எதையும் சேமிக்க முடியாது. சிக்கனமெல்லாம் மத்திய அரசு செய்ய வேண்டும். அதற்கு ஏராளமான வழிகள் இருக்கின்றன.

பாதுகாப்புக்கு ஒதுக்கியிருக்கும் பணத்தில் எவ்வளவோ சிக்கனம் செய்யலாம். செலவைக் கூட்டிக்கொண்டே போவதன் மூலமாகத்தான் பாதுகாப்பைப் பலமாக்கிக் கொள்ள முடியும் என்பது தவறு.

பகை கக்கிக்கொண்டு காத்திருக்கும் சீனக்காரனுடனும்.பக்கத்து பாகிஸ்தானுடனும் சுமுகமான உறவு இல்லாத நிலையில், 'பாதுகாப்புச் செலவு குறைக்கப்பட வேண்டும்' எனக் கூறுவதைத் தவருகக் கருதக்கூடாது.

செலவில் இல்லை நம்முடைய பலம்! இந்தியா—பாகிஸ்தான் போரில், விலை குறைவான மிகச் சாதாரண நம் போர் விமானங்கள்தான், மிக அதிக விலையுடைய பாகிஸ்தான் டாங்கிகளைத் தகர்த்து நாசப்படுத்தின! 'டாங்கிகளின் இடுகாடு' என்றே

(4-ம் பக்கம் பார்க்க)

# நாடுமுழுவதையும் நாம் ஆளும் காலத்தை எதிர்பார்க்கிறேன்

## பிரிவினை உணர்வு வட நாட்டவர் மனத்திலேதான் எதிரொலிக்கிறது

### உள்ளத்தைத் திறந்து அண்ணு தரும் விளக்கம்

சென்னை, மார்ச் 9—

'நாட்டுப் பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டு பல நாளாகிறது; பிரிவினை உணர்வு என்னிடத்திலே அறவே இல்லை; வடவர் உள்ளத்திலிருந்துதான், அது அவ்வப்போது எதிரொலிக்கிறது"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், திட்டவட்டமாக உள்ளந்திறந்து கூறினர்.

சட்டமன்ற மேலவையில், வரவு-செலவுத் திட்ட விவாதங்களுக்குப் பதிலளித்து நேற்று அண்ணு அவர்கள் ஆற்றிய பேருரையில், எதிர்க் கட்சியினர், கழகத்தின் மீது சுமத்தும் குற்றச்சாட்டை மறுத்துரைக்கையில் இதுபற்றி மேலும் விளக்கிபதாவது:—

"இந்தியா முழுமையையும் தென்னகம் ஆளும் காலம் ஒன்று வரும் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேனே தவிர, 'தமிழ் நாட்டை இந்தியாவிலிருந்து பிரித்துவிட வேண்டும்' என்ற எண்ணம் என் உள்ளத்தில் அறவே இல்லை!

"வடநாட்டைச் சேர்ந்தவர்கள்தான், தங்களுக்கு எரிச்சல் ஏற்படும்போதெல்லாம், 'தென்னுடு பிரிந்து போகட்டுமே' என்று கூறிவருகின்றனர்!

"பல்வேறு பிரச்சினைகளையும் நான் நாட்டின் ஒருமைப்பாட்டை மனத்தில் கொண்டுதான் அணுகுகிறேன்.

"கூட்டாட்சிமுறை குலைக்கப்பட்டுவிட்டால் மாநிலங்களின் நலன்கள் பெரிதும் பாதிக்கப்படும் என்பதை உணர்ந்தே நான் செயல்படுகிறேன்.

"நாட்டு நலனில் நாட்டம்கொண்டுதான் ஒவ்வொரு காரியத்திலும் ஈடுபடுகிறேன்."

# அன்பழகன் தாக்கப்பட்டார்

## சட்டமன்றத்தில் விவாதிக்க ஒத்திவைப்புக் கோரிக்கை

### சனநாயகத்தைப் பேண கட்சித் தலைவர்கட்கு நெடுஞ்செழியன் வேண்டுகோள்

சென்னை, மார்ச் 9 –

நேற்றிரவு சென்னை—எழும்பூர் இரயில் நிலையத்தில், நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் மாற்றுக் கட்சியினரால் தாக்கப்பட்டது குறித்து விவாதிக்கக் கோரி, இன்று சட்டமன்றத்தில், இடதுசாரிக் கம்யூனிஸ்டு உறுப்பினர் நெல்லிக்குப்பம் கோவிந்தராசனும், சுதந்தராக் கட்சி உறுப்பினர் டாக்டர் ஹண்டேயும், 'அவை நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டும்' என்று தனித் தனியே தீர்மானம் கொண்டுவந்தனர்.

திரு. நெல்லிக்குப்பம் கோவிந்தராசன் தமது தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகையில் தெரிவித்ததாவது:—

"இரயில் நிலையத்தில் தங்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவரை வரவேற்பதற்காக வந்திருந்தவர்கள், இரயிலேற வந்திருந்த திரு. அன்பழகனைத் தாக்கியும்,

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
இரா. செழியன்
திருவள்ளுவராண்டு 1999 மாசி 26 (9—3—68) சனி

# சனநாயக விரோதச் செயல்!

★

அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் தலைவராக இருந்துவருகின்ற நிஜலிங்கப்பா அவர்கள், மைசூர் மாநில முதலமைச்சராக இப்பொழுதும் தொடர்ந்து இருந்துவருகின்றார். நிஜலிங்கப்பா அவர்கள் காங்கிரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபொழுது, கூடிய விரைவில் வேறு ஒரு முதலமைச்சரைத் தேர்ந்தெடுத்துவிட்டு, தாம் அப்பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ளப்போவதாக அவரே அறிவித்திருந்தார்.

ஆனால் இன்றுவரை, தாம் அறிவித்தபடி முதலமைச்சர் பொறுப்பிலிருந்து அவர் விலகிக்கொள்ளவில்லை. அதற்கு மாருக அப்பொறுப்பில் அவர் நீடித்து இருந்துகொண்டிருக்கின்றார்.

தமக்குப் பதிலாக முதலமைச்சராக வேறு ஒருவரைத் தேர்ந்தெடுப்பதில் நிஜலிங்கப்பா அவர்களுக்குச் சங்கடம் இருக்கிறது. முதலமைச்சர் பதவிக்கு, காங்கிரசு அமைச்சர்களிடம் பலத்த போட்டி தலைதூக்கி இருக்கிறது. இதன் காரணமாக, யாரை முதலமைச்சராக ஆக்குவது என்ற முடிவுக்கு வர முடியாமல் நிஜலிங்கப்பா அவர்கள் திணறுகின்றார் என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

தமக்குப் பதிலாக முதலமைச்சர் பதவியில், இருக்கின்ற அமைச்சர்களில் எந்த ஓர் அமைச்சரை அவர் நியமிப்பதாக இருந்திட்டாலும், அது பற்றி நமக்குக் கவலையில்லை ; ஆனால், ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக இருந்துகொண்டே அனைத்து இந்தியக் காங்கிரசுத் தலைவராகவும் இருந்துகொண்டு, வேறு மாநிலங்களில் செயல்பட்டுவருகின்ற காங்கிரசல்லாத பல அரசியல் கட்சிகளின் கூட்டினால் செயல்பட்டு வருகின்ற அரசுகளைக் கவிழ்க்க—அம்மாநிலங்களிலிருக்கின்ற காங்கிரசுக் கட்சிகளை வெளிப்படையாகத் தூண்டிவருவது பற்றி நாம் கவலை கொள்ளாமல் இருப்பதற்கில்லை.

'அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர்' என்ற முறையில், மற்ற மாநிலங்களில் அமைந்திருக்கின்ற காங்கிரசல்லாத பல கட்சிகளைக் கொண்ட கூட்டு அரசுகளைக் கவிழ்த்துவிடுமாறு காங்கிரசுக் கட்சியினருக்கு 'அரசியல் நல்லுரை' கூறுவது, சிறந்த சனநாயகப் பண்பாட்டுக்கும் வளர்ச்சிக்கும் முரணானதாக இருந்திட்டபோதிலும், நிஜலிங்கப்பா அவர்களுக்குப் பிறப்புரிமையாகவும் இருக்கலாம்—பேச்சுரிமையாகவும் இருக்கலாம் ; ஆனால், அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் தலைவராக மட்டுமே இல்லாமல், வேறு ஒரு மாநிலத்தின் முதலமைச்சராகவும் இருந்துகொண்டு, மற்றொரு மாநிலத்தில் இயங்கிவருகின்ற அரசைக் கவிழ்க்க அம்மாநிலத்திலுள்ள காங்கிரசுக் கட்சியினரைக் கோரலாமா—தூண்டலாமா என்பதுதான் கேள்வி.

'அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர்' என்ற முறையில், கட்சிப் பணியாற்ற மைசூர் முதலமைச்சர் நிஜலிங்கப்பா அவர்கள் மத்தியப் பிரதேசம் சென்றிருக்கின்றார் ; அங்குள்ள நகரமான இந்தூரில், அம்மாநிலத்தில் அமைந்திருக்கின்ற சில அரசியல் கட்சிகளைக் கொண்ட சோஷித் விதாயக் தள அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடும் முயற்சியில் ஈடுபடும்படி அம்மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரசுக் கட்சியினரைக் கேட்டுக் கொண்டுள்ளார். 'காங்கிரசல்லாத ஐக்கிய முன்னணி அரசாங்கங்களில் சனநாயகமுமில்லை—அரசாங்கமும் இல்லை' என்ற குற்றச்சாட்டையும் நிஜலிங்கப்பா சுமத்தியுள்ளார்.

நிஜலிங்கப்பா அறிவித்திருப்பதுபோல், குறிப்பாக மத்தியப் பிரதேசத்தில் சனநாயகம் இல்லாமலுமிருக்கலாம்—அரசாங்கம் இருக்கிறது எனக் கொள்ளமுடியாத நிலையும் இருக்கலாம். 'அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் தலைவர்' என்ற முறையில், ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைத் தாக்கிப் பேச நிஜலிங்கப்பாவுக்கு உரிமை இருக்கலாம்—இருக்கத்தான் செய்கிறது ; ஆனால் தாமே மற்றொரு மாநிலத்தின் முதலமைச்சராக இருக்கின்ற நிலையில், வேறு ஒரு மாநில அரசாங்கத்தைத் தாக்கிப் பேசலாமா—அப்படித் தாக்கிப் பேச நிஜலிங்கப்பாவுக்கு உரிமை உண்டா? அப்படித் தாக்கிப் பேசி இருப்பது முறையாகுமா? அரசியல் பண்பாகுமா? சனநாயகக் கோட்பாட்டிற்கு அர்த்தமாகுமா?—இதுதான் கேள்வி. இதற்குத்தான் விளக்கம் தேவை.

நிஜலிங்கப்பாவின் சனநாயக விரோதமான இச்செயலைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவராக இருக்கின்ற சிவப்பா அவர்கள் மைசூர் சட்டப் பேரவையில் பிரச்சினை கிளப்பியிருக்கின்றார். முதலமைச்சர் நிஜலிங்கப்பாவின் பேச்சு, உயர்ந்தபட்ச ஆட்சேபகரமானது என்றும், சனநாயகக் கோட்பாடுகள் அனைத்துக்கும் விரோதமானது என்றும் சிவப்பா அவர்கள் இடித்துரைத்திருக்கின்றார்.

'ஒரு மாநிலத்து முதலமைச்சர் மற்றொரு மாநிலத்து அரசைக் கவிழ்த்துவிடத் தூண்டுவது ஒழுங்கானதா—நியாயமானதா' என்றும் சிவப்பா அவர்கள் கேட்டிருக்கின்றார் ; மேலும் சிவப்பா அவர்கள், 'தமிழக முதலமைச்சர் பெங்களூருக்கு வந்து இங்குள்ள அரசைக் கவிழ்த்துவிடும்படி இங்கிருக்கின்ற மக்களைக் கேட்டுக் கொள்ளும் பட்சத்தில், இங்குள்ளவர் என்ன நினைப்பர்? எவ்வாறு செயல்படுவர்?'-என்ற கேள்வியையும் கிளப்பி இருக்கின்றார்.

ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக இருந்துகொண்டு, மற்றொரு மாநிலத்தில் செயல்பட்டுவருகின்ற அரசுக்கு எதிராகக் குரலெழுப்புவதும், அந்த அரசைக் கவிழ்த்துவிடச் சொந்தக் கட்சியினரைத் தூண்டுவதும் சிறந்த சனநாயக மரபை உருவாக்குவது ஆகாது ; சனநாயகக் கோட்பாடுகள் அனைத்துக்கும் அது முரண்பாடானது ; அப்போக்கு, வன்மையான கண்டனத்துக்கு உரியது.

—கா. க.

# கலைத்துவிடட்டும் கல்வித் துறையை!

இந்திய அரசியல் சட்டப்படி, 'கல்வி', மாநில அதிகாரத்துக்கு உட்பட்டதுதானே! அப்படியானால், மத்திய அரசுக்கென்று ஒரு கல்வித் துறை இருக்கிறதே—அது என்ன செய்கிறது?

நியாயமான கேள்விதான் ; அறிஞர் அண்ணா அவர்கள்கூட அடிக்கடி சொல்லுவார்கள்—

**"தமிழகக் கல்வி அமைச்சர் தமிழகக் கல்விக் கூடங்களுக்குப் பொறுப்பு ; கேரளக் கல்வி அமைச்சரின் அதிகாரப் பிடிப்பு கேரளக் கல்விச்சாலைகள்மீது உண்டு ; வங்கத்துக் கல்வி நிலையங்கள் வங்கக் கல்வி அமைச்சருக்குக் கட்டுப்பட்டவை ; இந்த--மத்திய கல்வி அமைச்சர், எந்த மத்திய மக்களுக்காகப் பணியாற்றுகிறார்?"** என்று.

இப்போது புரிகிறது—மத்திய கல்வித்துறை எவ்வளவு 'அற்புதமான சாதனை'கள் புரிகிறது என்று!

மத்திய கல்வித் துறையின் மூன்று திட்டங்களை ஆய்ந்த மத்திய பொதுக் கணக்குக் குழு, அந்த அசிங்கத்தை அழகாகவே அம்பலப்படுத்தியிருக்கிறது.

பத்தாண்டுகளுக்கு முன்னே மத்திய அரசு கல்வித் துறை தொடங்கிய திட்டங்கள் இவை :—

1. ஆங்கில – இந்தி அகராதி.
2. 'சப்த பாஷா கோஷ்'—என்ற ஏழு மொழிச் சொற்களஞ்சியம்.
3. இந்தியின் 'பெருஞ்சிறப்பை' விளக்கும் வகையிலும், இந்தி – குசராத்தி – அசாமி – ஒரியா – வங்காளி – தமிழ் – தெலுங்கு – கன்னடம் – மலையாளம் ஆகிய ஒன்பது மொழிகளுக்கும் பொதுவாகச் சுருக்கெழுத்து முறை உருவாக்கல்.

**இந்த மூன்று திட்டங்களும் இன்னம் முடியவில்லை. அது மட்டுமன்று ; மத்திய கல்வித்துறை இந்தி வெறியர்களின் கேளிக்கைக்கூடம் என்பதும், பல்வேறு மொழிக்காரர்களின் வரிப் பணத்தில் அவர்கள் இந்திக்குப் பரிசோதனை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற அவலட்சணமும் பொதுக் கணக்குக் குழு அறிக்கையிலிருந்து தெரியவருகின்றன.**

**அங்கேதான் தலைக்குத் தலை நாட்டாண்மையாய் இருக்கிறதே!**

1. ஆங்கில -- இந்தி அகராதி தயாரிக்கும் வேலையில் அலகாபாதில் உள்ள 'இந்தி சாகித்திய சம்மேளனம்' ஈடுபட்டது. தக்க மொழி அறிஞர்கள் இன்மையால் அந்த வேலை அரைகுறையாக உள்ளதாம்! இந்த உண்மையை மத்திய கல்வித்துறையும் வெட்கமில்லாமல் ஒப்புக்கொள்கிறதாம்! இதுவரையில் உருவான சில கையெழுத்துப் பிரதிகள்கூட 'மட்டமானவை' என்று இந்தி சாகித்ய சம்மேளனமே கருதுகிறபோது, 'பிரமாதமாகவே இருக்கிறது' என்று சாதிக்கிறதாம் கல்வித் துறை! மொத்தத்தில் பாதி வேலைகூட முடியவில்லை!

**'எண்ணித் துணிக கருமம்' என்று வள்ளுவர் இவர்களுக்காகத்தான் சொன்னாரோ, என்னவோ!**

2. அடுத்தது 'சப்த பாஷா கோஷ்; இதை, ஐதராபாத்தில் உள்ள 'பதிவு செய்யப்படாத அறிவாளிகள் சங்கம்' ஒன்றிடம்—ஆந்திர மாநில அரசின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல்—மத்திய கல்வித்துறை ஒப்படைத்ததாம்!

**இப்போது அதன் நிலை என்ன தெரியுமா? கொஞ்சங்கூடப் பயனற்றவகையில் ஒரு பொருட் சொற்களைத் தயாரித்த பிறகு, 'இது, கைகூடி வராத வேலை' என்று கைவிட்டுவிட்டார்களாம்!**

**எப்படி இருக்கிறது அசிங்கம்? இங்கிருக்கிற காங்கிரசு அறிவாளிகள் என்ன சொல்லுவார்களோ இதைப் பார்த்து!**

3. அடுத்தது பொதுச் சுருக்கெழுத்து ; ஒன்பது மொழிகளிலும் உள்ள சொற்கள்—சொற்றொடர்கள், அசைகள், ஒலியங்கள், சொல்–வடிவ அமைபபியல் இவற்றை ஆராய்ந்து பொதுச் சுருக்கெழுத்து உருவாக்கவேண்டுமென்பது இலட்சியம்!

**நடந்தது என்ன தெரியுமா? இந்திக்கு மட்டும் ஒரு சுருக்கெழுத்து உருவாக்கினார்கள். அதையே சிறு சிறு மாற்றங்கள் செய்து மற்ற 8 மொழிகளுக்கும் பயன்படுத்தலாம் என்று முடிவு செய்துவிட்டார்களாம்!**

**எப்படி மத்திய கல்வித் துறையின் இந்தி வெறி!**

பலரும் பாராட்டிய படி அரிசித் திட்டத்தை ஏழை மக்களுக்காகச் செயல்படுத்தும்போதே, 'யார் அப்பன் வீட்டுப்பணத்தில் இதைச் செய்கிறார்கள்?' என்று கேட்கிற தமிழ்நாடு காங்கிரசுக்காரர்கள், 'இந்தி மைனர்'களின் இந்த விளையாட்டுககளுக்கு என்ன சொல்லுவார்களோ?

'மூங்கிற் பாயும் முரட்டுப் பெண்டாட்டியும்' என்று கொச்சையாகப் பழமொழி சொல்லுவார்கள் ; அதுபோல், இந்தியை 'ஆட்சி மொழி' என்று அறிவித்துவிட்டு—இந்தி வெறியர்களையும் கல்வித் துறையில் இருக்கவிட்டால், கேட்கவா வேண்டும்!

**ஊர்க் கோழியும் நாட்டுக் கோழியும் சேர்ந்தால் உரலில் உள்ள அரிசிக்குத்தான் சேதம்!**

மத்திய கல்வித் துறையின் இந்தக் கேவலக் கூத்துக்களால், மக்களின் வரிப் பணந்தான் பாழாகிறது—பலன் ஒன்றுமில்லை!

இந்த அக்கிரமங்களைச் சகித்துக்கொண்டிருப்பதைவிட, மத்திய கல்வித் துறையைக் கலைத்துவிடப் போராடுவதே மேல்!

—பூரணன்

# கேள்வி நேரம்!

மராட்டிய சட்டமன்றத்தில் இந்தப் புதுமை நடந்திருக்கிறது ; மற்ற மற்ற சட்டமன்றங்களும் இதனைப் பின்பற்றலாம்!

ஆளும் கட்சி — எதிர்க் கட்சி ஆகிய அத்தனையும் சேர்ந்து தொடர்புள்ள அமைச்சர்களுக்கே கேள்விகள் விடுப்பதும், அவைகளுக்குப் பதில்களைப் பெறுவதும், இப்போது அமுலில் இருந்துவரும் ஒரு நடைமுறை!

'தரவும் – பெறவும்' என்ற தத்துவத்தை மையமாகக் கொண்டதுதான் கேள்வி நேரம் ; ஆனால், நடைமுறையில் நாம் பார்ப்பதோ, இது, 'ஒருவழிப் பாதை'யாகத்தானே இருக்கிறது!

கேட்டவர்கள் எல்லாம் உறுப்பினர்கள் ; பதில் தருபவர்களெல்லாம் அமைச்சர்கள் மட்டுமே!

கேட்பதில் உள்ள 'இன்ப'மோ 'துன்ப'மோ—அது, உறுப்பினர்களுக்கு மட்டுமே புரிகிறது!

பதில் சொல்லுவதில் உள்ள 'இலாப'மோ 'நட்ட'மோ— அது, அமைச்சர்களுககு மட்டுமே தெரிகிறது.

விரும்பியதோ விரும்பாததோ—அதை இருதரபபினரும் 'பங்கு' போட்டுக கொண்டாலென்ன? பகிர்ந்துகொண்டாலென்ன?

இதனைத்தான் மராட்டிய சட்டமன்றம் செய்திருக்கிறது—புதிய சாதனையைப் படைத்திருக்கிறது!

சடந்த புதன்கிழமையன்றைய 'கேள்வி நேர'த்தின் கடைசி ஐந்து நிமிடங்கள், இந்தப் புதுமையைச் செய்துகாட்டியிருக்கிறது!

உறுப்பினர்களுக்குள்ளேயும் – அமைச்சர்களுக்குள்ளேயும், 'கேள்வி - பதில்' எழுப்பிக்கொள்ளும் முறை, மராட்டிய சட்டமன்ற விதிகளுக்கு உடன்பட்டதுதான் என்றாலும், அதனை இதுவரை அந்த அவை கடைபிடித்தது கிடையாது!

"இந்து பண்டிகை நாட்கள் சில, பொது விடுமுறை நாட்களில் சேர்க்கப்படவில்லையே?"

என்ற கேள்வியினை, ஆர். கே. மஹல்கி என்னும் ஜனசங்க உறுப்பினர் கேட்க—உடனே, எஸ். டி. மோர் என்னும் பி. சோ. கட்சி உறுப்பினர் எழுந்து, 'ஆமாம் ; அதனை நானும் கவனித்திருக்கிறேன் ; முன்பு கன்னம்வார் என்பவர் முதலமைச்சராக இருந்தபோது, இந்துப் பண்டிகைத் தினங்கள் சில பொது விடுமுறைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது அப்படியே தொடருகிறது ; இது பற்றி அதிகாரச் சார்பற்ற ஒரு தீர்மானம் கொண்டுவந்து ஆவன செய்ய முயற்சிக்கப் போகிறேன்' என்று உறுதி கொடுத்திருக்கிறார்!

அடுத்து, 'இந்து சபா' என்ற அமைப்பின் உறுப்பினரான வி. ஆர். பாட்டீல், 'இந்துக்கள், நாட்டில் பெரும்பான்மையினராக இருந்தும், இந்துப் பண்டிகைகள் ஏன் தேசிய விடுமுறையாகக் கருதப்படுவதில்லை' என்று கேள்வி எழுப்ப—அதற்கு, முன்னர் பதில் கூறிய பி.சோ. கட்சி உறுப்பினரே, 'மதத்துக்கும் தேசியத்துக்கும் தொடர்பு கிடையாது' என்ற பொருத்தமான விளக்கத்தைத் தந்திருக்கிறார்!

அடுத்து நடைபெற்ற நிகழ்ச்சிகள், சற்றுச் சிரிப்புக்கும் இடம் அளித்திருக்கின்றன!

இப்போது கேள்வி கேட்க எழுந்திருப்பவர் அமைச்சர்! இதுவரையில் பதில் தந்துகொண்டிருந்த உறுப்பினரின் தாடி, அமைச்சரின் கேள்விக்குக் கருவாக அமைந்தது!

கல்வி அமைச்சர் சௌத்ரி எழுந்து, 'உறுப்பினரின் தாடிக்கும் அவரது மதத்துக்கும் ஏதாவது தொடர்பு உண்டா?' என்று கேட்க—'தேசியத்துக்கும் மதத்துக்கும் தொடர்பு இல்லை' என்று பதிலளித்த அந்த உறுப்பினர் மீண்டும—'இல்லை' என்ற பதில் ஒன்றைத் தந்திருக்கிறார்!

தெளிவின்மைக்கு—தெரியாமைக்கு—தேவைக்குச் சிறிது ஒளியூட்டுவதற்காக இருப்பதுதான் சட்டமன்றக் கேள்வி நேரம்!

'பதில் கூறுவது நாமல்ல—அமைச்சர்தானே' என்ற கருத்தில், கேள்வியை கரடுமுரடாக்க நினைக்கும் மனப் போக்குக்கு ஒரு மருந்தாகவும், 'கேட்பதுவும் எளிதான காரியமல்லபோலிருக்கிறதே' என்று அமைச்சர்கள் உணர்வதற்கும்-மேலே விளக்கி

(3-ம் பக்கம் பார்க்க)

# டிராக்டர் வழங்கியதில் முந்திய அரசு காட்டிய பாரபட்சம்!

## சட்டமன்றத்தில் சூடான கேள்வி--பதில்

சென்னை, மார்ச் 7—

"1965—67-ஆம் ஆண்டில், விவசாயிகளுக்குக் கடன் தவணை முறையில் வழங்கப்பட்ட டிராக்டர்களில், செங்கற்பட்டு மாவட்டத்துக்கு மட்டும் அதிகமாக (45) இருப்பது ஏன்? மற்ற மாவட்டங்களுக்குக் குறைந்திருப்பது ஏன்?"

என்று சட்டமன்றத்தில் திரு. வி. கே. கோதண்டராமன் கேட்டார்.

அதற்கு வேளாண்மைத் துறையமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி பதிலளித்தாவது:—

"1966—67-ல் இந்த அரசு பொறுப்பேற்பதற்குமுன் கொடுக்கப்பட்ட டிராக்டர்களாகும் இவை; அதுபற்றி எங்களுக்கு விவரம் தெரியாது.

"செங்கற்பட்டு மாவட்டத்துக்கும், அதற்கு அடுத்தபடியாகக் கோவை மாவட்டத்துக்கும் (41) அதிக அளவில் கொடுத்திருப்பதற்கான காரணம், நான் கனம் உறுப்பினருக்குச் சொல்லத் தேவையில்லை — சொல்லாமலே புரியும் என்று கருதுகிறேன்; எனினும், நான் விசாரித்தவரையில், என்னிடம் கூறப்பட்ட காரணம், 'அந்தந்த மாவட்டங்களின் தேவைக்கும், வந்திருந்த விண்ணப்பங்களுக்கும் ஏற்றவகையில்தான் ஒதுக்கப்பட்டது' என்பதாகும்.

"இப்போது உள்ள அரசு புதிய கொள்கையை வகுத்துள்ளது; 'ஐந்து ஏக்கர் நஞ்சை அல்லது 10 ஏக்கர் புஞ்சை உள்ளவர்கள்—ரூ. 37,000 மதிப்புக்கு உறுதி தரக்கூடியவர்கள் டிராக்டர் கேட்டு விண்ணப்பம் செய்யலாம்' என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

"இவ்வாண்டு 280 டிராக்டர்கள்தான் கொடுக்கமுடியும்; இவற்றில் முந்திய அரசு போட்ட உத்தரவுப்படி 168 டிராக்டர்கள் கொடுக்கவேண்டியுள்ளது; மீதியுள்ள 92 டிராக்டர்களைத்தான் புதிதாகக் கேட்பவர்களுக்கு அளிக்கமுடியும்.

"ரூ. 25,000-த்துக்குக் குறையாமல் டிராக்டர் வாங்கக் கடன் கொடுக்கப்படும். அதிக நில வசதிபடைத்தவர்கள், ஓர் ஏக்கர்—இரண்டு ஏக்கர் நிலமுள்ள ஏழை விவசாயிகளுக்கும் வாடகைக்கு விட்டு, தங்கள் தவணைத் தொகையைச் செலுத்த வசதி இருக்கிறது."

## சிறிய நீர்த் தேக்கங்கள்

"தமிழகத்தில் 37 புதிய சிறு நீர்த் தேக்கங்களைக் கட்டும் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது; இதற்காக ரூ. 140 இலட்சம் ஒதுக்கப்பட்டபோதிலும், ரூ 150-இலட்சம்வரை செலவிட்டு முடிக்கப்படவிருக்கிறது"

என்று சட்டமன்றத்தில், அமைச்சர் மு.கருணாநிதி, ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

## கேள்வி நேரம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ள மராட்டிய மாநிலச் சட்டமன்றக் கேள்வி நேரம், நல்ல எடுத்துக்காட்டாக இருப்பதனை உணர முடிகிறது!

நிர்வாக இலாகாக்களிடமிருந்து பதில் தேவைப்படாத கேள்விகளுக்கு — சில பல பொது நிலைமைகள் பற்றிய கேள்விகளுக்கு—மற்ற மற்ற சட்டமன்றங்களும் இதுபோன்ற ஒரு 'நேரம்' ஒதுக்குவது, 'தரவும்—பெறவும்' என்ற கேள்வி நேரத் தத்துவத்துக்கு இன்னும் சற்று பொருளூட்டுவதாக இருக்கும்!

—எஸ். ஆர்.



**நம் உணவில் மூன்றில் ஒரு பாகம் சேதமாகிறது—அழுகும் பண்டங்களைப் பாதுகாக்காவிடில் உணவுப் பிரச்சனை மேலும் தீவிரமாகும்.**

# சரியான 'பாக்கிங்' முறை மூலம் இச் சேதத்தைத் தடுக்கலாம்

காய்கறிகள், பழங்கள், மீன், இறைச்சி, பால் பொருட்கள் இவையே விரைவில் சேதமடைந்து உபயோகிக்க இயலாமல் போகின்றன. அதன் காரணங்கள் பல.

அவைகளை உற்பத்தி செய்யுமிடங்களிலிருந்து தொலை தூரத்தில் இருக்கும் சந்தைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. வழியில் பல்வேறு வெப்பநிலைகளால் பாதிக்கப்படுவதால் விற்பனை இடத்தையடையும் தருணத்தில் அவை நல்ல நிலையில் இருப்பதில்லை. இவற்றைப் பதமாக வைக்க ஏற்ற குளிர்ச்சாதன வசதிகளோ மற்றவசதிகளோ இல்லாமையே இதன் காரணம். இந்நிலையில் இவற்றுக்குப் பாதுகாப்பளிக்கும் ஒரே வழி சிறந்த 'பாக்கிங்' முறையே.

விஞ்ஞான முறையில் பதப்படுத்தி 'பாக்' செய்தால் இப் பொருள்கள் சேதமடைவதைத் தவிர்க்க முடியும். மேலும், பெரும் அளவில் நாட்டில் எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லவும் 'பாக்' செய்யப்பட்ட பொருள்கள் வசதியானவை.

நாட்டின் உணவு சேதமாவதைத் தடுக்க மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் விஞ்ஞான முறையில் பதப்படுத்தும் முறைகளை அளிக்கிறார்கள். உணவுப் பொருட்களைச் சோதிப்பது, அவற்றுக்கேற்ற 'பாக்கிங்' முறைகளை சிபாரிசு செய்வது - உதாரணமாக, வெவ்வேறு மாதிரியான தகர டின்களிலும், மற்றும் வெளிநாடுகளிலிருந்து அறிந்து வந்த தொழில் நுட்பத்துடன் கூடிய சிறந்த 'பாக்கிங்'முறைகளையும் அளிப்பது இவையெல்லாம் இவ் வசதிகளில் அடங்கியவை.

இந்தியாவில் உள்ள 9 நிறுவனங்கள் மூலமும் மெட்டல் பாக்ஸ் கம்பெனியார், உணவுச் சேதத்தை தடுக்க உதவுகின்றனர். இப்போதைய உணவுப் பற்றுக் குறை நிலையில் எங்கள் பணி மிகவும் சிறியது என்பதை நாங்கள் அறிவோம். ஆயினும் இச் சமயத்தில் சிறு துளியும் பெரு வெள்ளமாக உதவும் என்ற நம்பிக்கையே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

MB
மெட்டல் பாக்ஸ்
பாதுகாப்பான பாக்கிங்

# அன்பழகன் தாக்கப்பட்டார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் சட்டையைப் பிடித்து இழுத்துக் கிழித்தும், அவருடைய கார் டிரைவரைத் தாக்கியும், காரைச் சேதப்படுத்தியும், அவருடைய உயிருக்கே ஆபத்து விளைவிக்கக்கூடிய வகையிலும் வன்முறையில் ஈடுபட்டிருக்கின்றனர். இத்தகைய ஒரு பயங்கர நிலையில், அன்பழகனும் அவருடன் வந்திருந்தவர்களும் சிக்கி அவதிப் பட்டிருக்கின்றனர்.

"திரு. அன்பழகன் அவர்கள் நாடாளுமன்ற தி. மு. க. கட்சியின் தலைவர் ஆவார். அவருக்கே இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது.

"தங்கள் கட்சியைச் சேர்ந்தவரை வரவேற்க அவர்கள், கம்பும் கழியும் கொண்டுவந்திருக்கின்றனர்; அன்பழகனைப் பார்த்ததும், அவரைத் தாக்கியும், அவர் காரிலிருந்த கொடியைக் கிழித்தும், காருக்குச் சேதப்படுத்தியுமிருக்கின்றனர்.

"ஒரு பத்திரிகையில், கம்பு கழியுடன் வரவேற்க வருமாறு முன்கூட்டி எழுதப்பட்டதுதான் இதற்குக் காரணமாகும். இப்படி, அன்று, அன்பழகன் மட்டுமல்ல; அமைச்சர்களோ, இந்த அவையின் தலைவரோ அங்கு சென்றிருந்தால்கூட, அவர்களும் தாக்கப் பட்டிருக்கக் கூடும். எனவே, இதுபற்றி இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது — எடுக்கப் போகிறது என்பதை விவாதிக்க வேண்டும்."

## டாக்டர் ஹண்டே

டாக்டர் ஹண்டே, தமது தீர்மானத்தை வற்புறுத்திப் பேசுகையில் கூறியதாவது:—

"இந்த நிலைமை இப்படியே வளருமானால், எதிர் காலத்தில் எந்தக் கட்சித் தலைவருக்கும் இப்படிப்பட்ட ஆபத்துக்கள் ஏற்படக்கூடும்; எனவே, சபை நடவடிக்கைகளை ஒரு அரை மணி நேரமாவது ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும்; எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒன்றாக அமர்ந்து இதற்கு ஒரு பரிகாரம் காணவேண்டும்."

## அமைச்சர் நெடுஞ்செழியன்

அவை முன்னவரான அமைச்சர் நெடுஞ்செழியன் பதிலளித்துப் பேசியதாவது:—

"நேற்று நடைபெற்றிருக்கும் இந்த நிகழ்ச்சி உள்ளபடியே வருந்துவதற்குரியதாகும். இது தொடர்பாக என்னென்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது அன்றாட நிர்வாகப் பிரச்சினையையொட்டியதாகும். முறைப்படி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

"இந்த நிகழ்ச்சி எந்த அளவுக்கு வருந்துவதற்குரியது என்பதை இந்த அவை உணரும்.

"நாடாளுமன்ற தி. மு. க. கட்சித் தலைவரான திரு. அன்பழகனும், அவருடன் இருந்த கே. பி. சுந்தரமும் சுற்றி வளைக்கப்பட்டு — சட்டைகள் கிழிக்கப்பட்டு—தாக்குதலுக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

"இந்த நிகழ்ச்சி, தமிழ்நாடு காங்கிரசுத் தலைவருக்கோ ஏனைய தலைவர்களுக்கோ ஒப்புதல் அளிக்கக் கூடியதாகாது.

"வன்முறைச் செயல் எங்கு நடந்தாலும், அதை எந்தக் கட்சிக்காரராக இருந்தாலும் தடுத்து நிறுத்த வேண்டும்.

"முன்பு, கோவையில் மத்திய துணை அமைச்சர் திரு. கே. எஸ். இராமசாமி அவர்கள் தாக்குதலுக்குள்ளானது கேட்டு நமது முதலமைச்சர் மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்கள் வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள்.

"அரசியல் கட்சிகளிடை இத்தகைய சூழ்நிலை வளருவதோ, தலைவர்களைத் தாக்கத் தூண்டுவதோ, இனி யாருமே பாதுகாப்பில்லாமல் செல்ல முடியாத நிலையை உண்டாக்கும்.

"உத்தரப் பிரதேச ஜனசங்கத் தலைவர் உபாத்தியாயா இரயிலில் பயணம் செய்துகொண்டிருக்கும்போதே கொல்லப்பட்டதை அறிவோம். இத்தகைய நிலை வளருமானால், மாற்றுக் கட்சித் தலைவர்கள் எங்குமே செல்ல முடியாது. சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் இந்தக் கருத்து வற்புறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் அந்தந்தக் கட்சித் தலைவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

"இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நிகழுவதற்குப் பத்திரிகையில் எழுதுவதும் ஒரு காரணமாகும். 'அமைச்சர்களைக் கோட்டைக்குள்ளே விடக்கூடாது; அவர்கள் காரைத் தடுத்து நிறுத்த வேண்டும்' என்றெல்லாம் பத்திரிகைகளில் எழுதுவது இப்படிப்பட்ட காரியங்களுக்குத் தூண்டுதலாக அமையும்.

"இதற்கு, உரிய கட்சித் தலைவர்கள் மூலம்தான் தீர்வுகாண வேண்டும்; தலைவர்கள்தான் இவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

"காவல் துறையினர் இந்த நிகழ்ச்சி தொடர்பாக ஆறு பேர்களைக் கைது செய்துள்ளனர். அது பற்றி இங்கே ஆராய்வது சரியல்ல.

"கருத்து வேற்றுமைக்கு மதிப்பளித்து, மனிதனை மனிதன் மதித்தால்தான் சனநாயகம் காப்பாற்றப்படும். எனவே, அத்தனைக் கட்சிக்காரர்களும், இனி எதிர்காலத்தில் இவ்விதம் நடக்காமல் இருக்கும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும்."

# பச்சரிசி வாங்குவோருக்கு ஒரு மாத 'ரேஷன்'

## ஒரே தடவையில் வாங்க வசதி

சென்னை, மார்ச் 9—

"சென்னை மக்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்; இப்போது, ஒரு வாரத்திற்கு 'ரேஷன்' வழங்கப்படுகிறது; இதை, 'ஒரு மாதத்திற்கு வாங்கிக்கொள்ள வசதி செய்யவேண்டும்' என்று கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கிறது; இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள அரசும் இசைவு தெரிவித்திருக்கிறது.

"ஒரே மொத்தமாகப் புழுங்கலரிசி தருவதற்குச் சில இடையூறுகள் இருக்கின்றன; எனவே, இப்போது, முதலில்

**மார்ச் 15-ம் நாள் முதல் பச்சரிசியை அந்த முறையில் வாங்கிக் கொள்ளலாம்.**

"'வாரத்திற்கு ஒருமுறை' என்று நான்கு முறை வாங்குவதற்குப் பதில், ஒரே தடவையில் இனி வாங்கிக் கொள்ளலாம்; நான்கு தடவையாக வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம்.

"முதலாவதாக இத்திட்டம் சென்னைக்கு அமுலாகிறது."

—அமைச்சர்
**கே. ஏ. மதியழகன்**
(சட்டமன்றத்தில்)

# நடக்க இருப்பவை

## 10--3--68

**மதுரை**

நகர் தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு ஆழ்வார்புரத்தில் (மூங்கில் கடைத் தெருவில்); தலைவர்: கு. திருப்பதி பி.ஏ., பி.எல்.; பேசுவோர்: க. அன்பழகன் எம்.பி., எஸ். முத்து எம்.எல்.சி., மற்றும் பலர்.

**விழுப்புரம்**

நகர தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு மந்தைக்கரை திடலில்; தலைவர்: எம். சண்முகம் எம்.எல்.ஏ.; பேசுவோர்: நடிகமணி டி. வி. நாராயணசாமி, புலவர் வேங்கைமார்பன், எஸ். கோவிந்தசாமி, எஸ். ஏ. ஏழுமலை, கே. வி. இராதாகிருஷ்ணன் எம்.ஏ.பி.எல்., பு, மா. லோ. சீனிவாசன், வி. துரைராசு எம்.சி.

**சென்னை 91-வது வட்டம்**

சத்தியவாணிமுத்து மன்றச் சார்பில் மாலை 6-மணிக்குமைனர் டிரஸ்டுபுரம் திடலில்; தலைவர்: செ. மோசனப்பா; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணிமுத்து, காஞ்சி மணிமொழியார், எம். கோபால் எம்.எல்.ஏ, சா.கணேசன் எம்.சி., மற்றும் பலர். (இரா வசந்தகுமார் தலைமையில் 'தொல்லைக்கும் ஓர் எல்லை' என்னும் ஓரங்க நாடகம் நடைபெறும்)

## 11--3--68

**காரைக்குடி**

எழுச்சி மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு காந்தி திடலில்; தலைவர்: எஸ். அபுபக்கர்; பேசுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., மு. இராமனுதன், பெரி. அழகு, சித. சிதம்பரம், சேவக்கொடியோன்.

**நாகக்குடையான்**

தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு ரேடியோ நிலையம் அருகில்; தலைவர்: சி. கோவிந்தசாமி, பேசுவோர்: என். வி. நடராசன் எம்.எல்.சி., ந. தருமலிங்கம் எம். எல். ஏ., சிவ. கனகசுந்தரம், மா. மீனுட்சிசுந்தரம், ப. முருகு எம் ஏ., செ. யூசுப், வெ. கோதண்டபாணி, வீ முத்துக்கிருஷ்ணன். (ஊராட்சித் தலைவர் செ. கோபாலன் தலைமையில் மதன் – மாலா குழுவினரின் 'எங்கள் சாதனை' எனும் கலை நிகழ்ச்சி நடைபெறும்)

## 12--3--68

**உம்பளச்சேரி**

தி மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு பேருந்து நிலையம் அருகில்; தலைவர்: வ. பாலசுப்பிரமணியன்; பேசுவோர்: என். வி. நடராசன் எம்.எல்.சி., ந. தருமலிங்கம் எம்.எல்.ஏ., இரா. சங்கரன், மா. மீனுட்சிசுந்தரம், ப. முருகு எம்.ஏ., மு. க. அன்பரசு, கே. வைரக்கண்ணு, செ. யூசுப், வே. கோதண்டபாணி.

# திண்டிவனத்தில் தீயணைக்கும் படை

## ஆ. தங்கவேலு முயற்சியின் பலன்

### அறிஞர் அண்ணாவைச் சந்தித்து தீ விபத்துக்கள் பற்றி விளக்கினார்

சென்னை, மார்ச் 8—

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு ஆ. தங்கவேலு அவர்கள், இன்று பகல் 12 மணியளவில் முதலமைச்சர் அண்ணா அவர்களை மருத்துவமனையில் சந்தித்து, திண்டிவனம் நகரப் பகுதிகளில் கடந்த 15 நாட்களில் ஏற்பட்ட 4 தீ விபத்துக்களைப் பற்றியும், நேற்றிரவு ஏற்பட்ட தீ விபத்துக் குறித்தும் விளக்கி, திண்டிவனத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தவேண்டிய இன்றியமையாமையை வற்புறுத்தினார்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள் உடனடியாக, தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, தீ விபத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுமாறும், தீயணைப்புப் படை ஏற்படுத்த ஆவன செய்யுமாறும் தெரிவித்தார்.

# சலவையாளர்-முடிதிருத்துவோருக்கு அறிஞர் அண்ணா அளித்த சலுகை

"சலவையாளர்களுக்கு 'இஸ்திரி'ப் பெட்டிக்காக ரூ. 50-ம் 'வெள்ளாவி'ப் பானைக்காக ரூ. 60-ம் ஆக தலைக்கு ரூ. 110 இலவசமாக வழங்கப்படுகிறது.

"அதேபோல் முடிதிருத்தும் தொழிலாளருக்கு ரூ. 53 இலவசமாகத் தரப்படுகிறது.

"இந்தச் சலுகை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் 60 பேருக்குத் தரப்படுகிறது"

என்று அரிசன நல அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் சட்டமன்ற மேலவையில் குறிப்பிட்டார்கள்; அப்போது முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் மேலவையில் வீற்றிருந்தார்கள்; அதைத் தொடர்ந்து சட்டமன்ற மேலவை காங்கிரசு உறுப்பினர் திரு. எத்திராசு அவர்கள், ஒரு கோரிக்கை விடுத்தார்.

**இப்போது இலவசமாகத் தரப்படும் இந்த உதவி முன்பு 5 ஆண்டுக் கடனாகத் தரப்பட்டதாகவும், அந்த முறைப்படி கடன் பெற்றவர்கள் இன்னம் கடன் தவணை கட்டிக்கொண்டிருப்பதாகவும், இனி அந்தக் கடனை இலவச உதவியாகவே கருதி நீக்கிவிடுமாறும் மிக உருக்கமாக வேண்டினார்; உடனே முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள்,**

**"உறுப்பினரின் இந்த உருக்கமான வேண்டுகோளை அரசு ஏற்றுக்கொண்டு விட்டது"**

என்று கூறி மன்றத்தை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தினார்கள்.

**கோரிக்கை எதிர்க் கட்சியினரிடமிருந்து வந்ததென்றாலும், ஏழைகள் நன்மை கருதி உடனே ஏற்றுக்கொண்டது அண்ணா அவர்களின் பெருந்தன்மையை விளக்கியது.**

# மேலவையில் அண்ணா கருத்துரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சொல்லத்தக்க அளவில் அவற்றை நாசமாக்கினர் நம் வீரர்கள்! அது, நம் வீரர்கள் போராடும் ஆற்றலால் கிடைத்த வெற்றி!

வட்டாரங்களிடையே பாசம் வளர்த்தலும், மக்களுக்கிடையே ஒற்றுமை உணர்ச்சியை உருவாக்கலும் நம் வலிவை வளர்த்துக்கொள்ளும் வழிகள்!

நம்முடைய தாக்கும் சக்தியைக் குறைத்துக் கொள்ளாமலேயே பாதுகாப்புச் செலவைப் பல நூறு கோடிகள் குறைக்க முடியும்!

அடுத்து ஒன்று; ஒவ்வொன்றையும் மத்திய அரசு இரட்டிப்பாகச் செய்துவருகிறது. அனைத்திந்தியக் கல்வி சர்வீசு, அனைத்திந்திய மத்திய சர்வீசு, அனைத்திந்திய பொறியியல் சர்வீசு— என்று அனைத்திந்திய சர்வீசுகள் எதற்காக? மத்திய அரசின் நேர்ப் பார்வையில் வட்டாரக் கல்லூரிகள் எதற்காக? இவையெல்லாம் இரட்டைச் செலவுகள்தானே?

புதிய அரசு பொறுப்பேற்றவுடன், 'இந்த முறையை நாங்கள் ஒப்புக்கொள்வதற்கில்லை' என்று மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறது.

அடுத்துப் பொதுத் துறையில் கிடடத்தட்ட ரூ. 2,000 கோடி செலவிடடும், பலன் ஏதும் இல்லாத நிலை காண்கிறோம்! இதே ரூ. 2,000 கோடியை தனி முதலாளிகள் செலவிட்டிருந்தால் என்ன இலாபம் சேர்த்திருப்பார்கள்? ஏன் இந்தக் குறை? பொதுத் துறைத் தொழில்கள் இலாபம் தரத்தக்க வகையில் அவற்றின் நடைமுறைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

இவற்றையெல்லாம் நான் சொல்லும்போது, 'தமிழக அரசு' என்ற நிலையில் நின்றுதான் பேசுகிறேன். தமிழ அரசின் இந்தக் கோரிக்கைகளில் காங்கிரசுக்காரரும் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

சேலம் இரும்பாலைக்காக ஓர் எழுச்சி நாள் கொண்டாட முடிவு செய்து காங்கிரசாரைப் பேச அழைத்தபோது, அவர்கள் கலந்துகொள்ள மறுத்து விட்டார்கள்; அந்தக் கண்ணோட்டம் இல்லாமல் தமிழக அரசுக்கு—திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு அல்ல— தக்க ஒத்துழைப்புத் தருவார்களானால் தமிழ்நாட்டு மக்களிடையே நல்ல முன்னேற்றம் காணலாம்.

மொழிப் பிரச்சினையை ஒட்டி நான் காமராசரைச் சந்தித்ததை எதிர்க் கட்சித் தலைவர் பாராட்டினார்; ஆனால் அடுத்து நான், இராஜாஜியைச் சந்தித்தது அவருக்குப் பீதி யூட்டியதாகவும், அடுத்துச் சட்டமன்றத்தில் பேசிய பேச்சு அவருக்குத் தெளிவுண்டாக்கியதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார்; நான் சொல்வதைக் கேட்டு அவர் திடுக்கிடக்கூடாது.

நானும் காமராசரும் சந்தித்தால் போதாது; நானும் இராஜ ஜியும் சந்தித்தால் போதாது; காமராசரும் இராஜாஜியும் சந்திக்க வேண்டும்; அப்போதுதான் மொழிச் சிக்கல் சுலபமாக அவிழும்.

ஒருவரை விட்டுவிட்டு ஒருவரைச் சந்திப்பதாலே நிறைந்த பலன் ஏற்பட்டுவிடாது. அந்தச் சந்திப்புக்கு எதிர்க் கட்சித் தலைவர் பொறுப்பேற்க வேண்டும்.

இப்போது நல்ல சூழ்நிலை இருக்கிறது. காங்கிரசுக்காரர்கள் தங்கள் மாச்சரியங்களை மறந்து தமிழக அரசுடன் ஒத்துழைத்தால் நல்ல பலன்களைத் தமிழக மக்கள் அடைவார்கள். அந்த வகையில் அனைவரதுஒத்துழைப்பையும் நான் வேண்டுகிறேன்."

# இந்தியின் யோக்கியதை!

ஐக்கிய நாடுகள் சபை வெளியிடும் 'யுனெஸ்கோ கூரியர்' என்ற ஏடு, 1966-ம் ஆண்டு வரை உலகின் 11-மொழிகளில் வெளியிடப்பட்டுவந்தது.

கடந்த ஆண்டு, இதனை இரண்டு இந்திய மொழிகளில்—தமிழிலும், இந்தியிலும் வெளியிடும் பணி தொடங்கியது.

இந்தியில் வெளியிடும் பொறுப்பை மேற்கொண்ட இந்திய அரசின் இந்தி அலுவலகம், 8-மாதங்களில் 4 இதழ்களை வெளிக் கொணர்ந்திருக்கிறது!

தமிழ் வெளியீடு ஒவ்வொரு மாதமும் தவறாது வெளியாகிக் கொண்டிருக்கிறது!

ஆங்கில 'யுனெஸ்கோ கூரியரை'ப் படித்துப் புரிந்து கொள்ள முடியாது!

இத்தகவலை புதுடில்லியிலிருந்து வெளிவரும் 'தினமான்' என்னும் இந்தி மொழி ஏடே வெளியிட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.